So far as housing loan for Ceylon repatriates is concerned, the previous Minister, Thiru Mathialagan stated that the total aid must be a grant. There should not be any question of loan. This is our plea to the Union Government.

I may add that we had requested the Government of India to give substantial grant for the scheme of housing for Ceylon repatriates as in the case of assistance given to the persons uprooted as a result of the Indo-Pakistan Conflict, 1965, in Jammu and Kashmir. But the Government of India have not complied with our request.

VI. GOVERNMENT BILLS

(1) *The Tamil Nadu Town and Country Planning Bill*, 1970 (*L. A. Bill No.* 23 *of* 1970).

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட பிரேரணையை முன் மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நகர-நாட்டுபுற அமைப்பு மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 23/1970) ஆலோசிப்பதற்காக, இரு சபைகளையும் சேர்ந்த 30 உறுப்பினர்கள் (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும் 10 சட்ட மன்ற உறுப்பினர்களும்) அடங்கிய கூட்டுப் பொறுக்குக் குழு ஒன்றை அமைப்பது குறித்து சட்டப் பேரவையின் கருத்தை இம்மன்றம் ஏற்கின்றது. அத்தகைய கூட்டுப் பொறுக்குக் குழுவில் பணியாற்ற இம்மன்றத்தின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களாக :

1. திரு. ஏ. ஆர். தாமோதரன்.
2. திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்.
3. திருமதி எஸ். மஞ்சுபாஷினி.
4. திரு. எஸ். முத்து.
5. திரு. ஜி. பராங்குசம்.
6. திரு. கே. ராஜாராம்.
7. திரு. என். சுந்தரேசன்.
8. திரு. ஜி. சுவாமிநாதன்.
9. திரு. வி. தங்கபாண்டியன்.
10. திரு. வி. வெங்கா."

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 30 Members (20 Members of the Assembly and 10 Members of the Council) to consider the Tamil Nadu Town and Country Planning Bill, 1970 (L.A. Bill No 23 of 1970) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :

1. Thiru A. R. Damodaran
2. Thiru S. Jayarama Reddiar

3. Thirumathi S. Manjubhashini
4. Thiru S. Muthu
5. Thiru G. Parangusam
6. Thiru K. Rajaram
7. Thiru N. Sundaresan
8. Thiru G. Swaminathan
9. Thiru V. Thangapandian
10. Thiru V. Venga."

*THIRU S. NARAYANASWAMY : Sir, with reference to the effort of the Government to bring in this new Bill, namely, the Tamil Nadu Town and Country Planning Bill, I wish to point out that the Planning Commission for quite some time emphasised the question of planning the rural parts of India and that the principles of country and town planning should be applied to the countryside. I cannot claim to know the emphasis in this Bill, but I do hope that it would be the effort of this Government in moving this Bill not merely to change the name but also to do something very radical about the proper investment of funds and diligent and non-wasteful investment of funds in rural build up. This is what we hope will be done in the planning of this Bill. I do hope and trust that it would be possible for the Government to see that a little more of attention is given to the way in which house building goes on, water-supply goes on, and sanitation goes on in the course of this new planning which this Bill thinks of. I hope and trust that it would be possible for the Government to incorporate all the principles of radical town planning in the new Bill and it is not my intention to take up the time of the House except to say that we are watching with interest what is going to be done by the Joint Select Committee on this Bill with regard to particular emphasis on the investment in rural areas.

Thank you, Sir.

TRUTH ALONE TRIUMPHS

4-40 p.m.

DEPUTY CHAIRMAN : Thiru A. R. Damodaran . . .

*THIRU A. R. DAMODARAN : Is it permissible, Sir ? Can I speak ? I have been put on the Joint Select Committee. I thought that my mouth would be gagged. I am thankful to you for having allowed me to speak.

I wish to make some general observations on this salutary Act that has been brought before this Council for its consideration. I remember, Sir, in 1959, when I was the Chairman of the Cuddalore Municipal Council, we were dealing with Town Planning Act in a rather cursory way. We had submitted two or three schemes to the Director of Town Planning for implementation in the Cuddalore Municipal area. I am sorry to say that even in the year 1970, due to various defects in the old

27th November 1970] [Thiru A. R. DAMODARAN]

Planning Act, it has not been possible to implement those schemes and, therefore, the Town Planning Act of 1920 has been very much of a dead letter for the past 50 years. It is, therefore, in this spirit that I welcome the very comprehensive Bill that has been brought to-day. I am also glad that in view of the fact there are about 130 clauses in the Bill, it is being referred to a Joint Select Committee because obviously, a Bill of this nature would require a great deal of study and study not only by Members of the Legislature but also by experts and the public so that they could offer their valuable suggestions. I have just a few comments to make on some of the clauses that I have noted in this Bill.

I know, Sir, that under section 5 of the Bill, the Tamil Nadu Town and Country Planning Board is to have certain Members who have been enumerated in the Bill. I find that a very significant omission has been made. While Secretaries of over nine Departments have been included, three Chief Engineers have been included, three representatives of the Central Government have been included, the Director of Town Planning, the Joint Director of Town Planning and three other members nominated by the Government from among the members of the State Legislature and the Members of Parliament have been included, no mention has been made of giving membership to the Experts, the Architects and the Town Planners, who are outside all these sectors, that is, in the private sector. In the private sector we have very many able Experts, Architects and Town Planners. I feel they would be able to render invaluable service if they are also included in the Tamil Nadu Town and Country Planning Board. We need not assume that all wisdom is necessarily concentrated in the Directorate of Town Planning and I do not gainsay the fact that they would have very good knowledge on the subject. But since this is a highly expert field, I believe that many of those who have qualified themselves abroad and obtained degrees and who have had opportunities of studying Town and Country Planning outside our own country should also be given an opportunity to serve on the State Board.

Another section which intrigued me was section 47. Under section 47 it has been stated that after the coming into operation of any development plan in any area, no person other than any State Government or the Central Government or any local authority shall use or cause to be used any land or carry out any development in that area otherwise than in conformity with such development plan. My submission is that the greatest offenders to-day are the local authorities because they are the persons who tolerate the unwarranted encroachments that are put up in many of our Municipal and urban areas. Therefore, if we exclude the State Government and the local authorities from applying for permission or from acting up to the regulations of this Act, I personally feel that the very purpose for which the Bill is being brought before the House may be nullified by the scant respect that the local authorities

4-5 p.m.

generally have for the ideals of country and town planning. I remember, Sir, in 1965 when I visited the town of Dussuldorf in West Germany, which has been newly built up after it was completely devastated in World War II, I went to a Sector at 6 o'clock in the evening and I found not a single soul in the streets of Dussuldorf. I was very surprised and going from India where we find people in the streets practically everywhere after 6 o'clock, I was wondering why this peculiar circumstance should occur in that town and I was informed that the Sector that I was visiting was the business, non-residential sector and that all the offices were located in that locality, with the result that after 6 o'clock not a single person could be found roaming about the streets or straying in those quarters. I hope a time will come in our country also where we can regulate all our industries and all our officers in a particular sector at least in the new towns—I do not think that it will be possible in the old towns but at least in the new towns which we are out to develop. We should do it in a systematic and rational way so that the convenience of the public is taken into account in such planning. That is why although clause 59 says that the local authorities may apply to the Government. I feel, Sir, it is rather strange because there is no point in asking a Department of the State Government to appeal to the Government themselves in case there is any difference of opinion between the Planning authority and the Department of the Government. I believe that even in the case of State or Central Government or local authorities, when they want to develop a certain locality or building, if there is a difference of opinion between the local planning authority and the other authorities mentioned, the appeal should go to the State Town and Country Planning Board and only after it is considered by that Board should any decision be arrived at. I do not think any useful purpose would be served by delegating the authority to the State Government to investigate a complaint made by a department of the State Government.

Another provision relates to clause 49 under which applications are made to the Planning Authority for making alterations in building or for developing any land. It has been my experience in Municipalities that a number of people make applications for putting up buildings and no decision is communicated to the parties by the Municipality or the Corporation for three or four months, although there is a specific rule in the District Municipalities Act to the effect that the decision should be communicated within 30 days from the date of application. But I find that in this particular Bill no time-limit has been fixed for the Planning Authority either to approve or to reject the plan. I think this very wholesome provision should be included so that a definite time-limit of one or two months is given to the Planning Authority either to suggest modifications in the Plan that is submitted or to reject or to approve it as it is.

27th November 1970] [Thiru A. R. DAMODARAN]

I now turn to clause 61. It says that development charges are going to be collected and for that they have fixed the maxima that could be collected at Rs. 20,000/- per hectare in the case of development of land and Rs. 5/- per square metre in the case of development of building. I believe that this will lead to a lot of litigation and a number of appeals are likely to come up when the Planning Authority issues notices to the various parties in a selected area. Under section 77 where provision for appeals has been made I would submit that the development charges should not be collected in full until the appeal is disposed of. We are having the very miserable experience of the Urban Land Tax where the entire urban land tax is collected before filing of an appeal and I believe this would cause a great deal of hardship to the people. Since this is a new Bill and a new idea that we are creating in the country —normally our people do not react very well to all the regulations and rules that constitute town and country planning — it is necessary for us also to get the co-operation of the people and I would suggest that at least for an initial period of ten or fifteen years the provision regarding development charges should be viewed with a certain amount of leniency and collection should be kept pending — at least 75 per cent of the development charges should be kept pending — until the appeals are fully disposed of. Otherwise, it may cause a lot of unfavourable reaction among the general public.

Another section which is intriguing me is section 116 wherein it is stated that if the owner of any building does not carry out certain repairs or alterations as asked for by the Planning authority, the occupier of the building will be asked to carry out the repairs on behalf of the owner and recover the cost thereof from the rent that is due to the owner. I think it is a terrible responsibility to put on the occupier of any building. Firstly, he may not have the money to do it. Secondly, he may not have the facilities to carry out such repairs. Thirdly, I do not think it will be possible for him to recover the cost of repairs from the rent, since it may take years to do so. I do not see why the Planning authority which is a highly competent and technical authority should not be empowered to carry out these repairs, if the owner refuses to do so and I would suggest that instead of the occupier being asked to do all these repairs and then recovering the cost from the owner, the Planning authority itself may take upon itself the responsibility of doing the repairs and then collecting the cost from the owner concerned. These are some of the points which I wanted to mention. But, in general, I would like to state that town and country planning will not be introduced merely by passing Bills with about 130 clauses. I am not very sure whether the Government today are themselves in a position to offer their co-operation to the Town Planning authorities in the implementation of various schemes. If we watch the ugly enrcoachment that have come up on our highways in our towns and in even small Panchayat areas, I am very doubtful whether even the Government themselves are co-operating

and seeing that even the normal encumbrances are removed. In every highway encroachments have taken place. You have only to go from Madras to Tiruchirappalli to find the number of encroachments that have come up in Tambaram. They are a serious hazard to road traffic. Apart from that, a number of unwanted slums are growing up in busy areas, leading to various problems connected with public health and maintenance of road traffic safety measures and I am afraid that unless there is a will and determination on the part ofthe Government also to co-operate in the implementation of this very salutary Bill, it would be very difficult for the Director of Town Planning or for even the State Board to draw up a master plan or regional plans and those plans like many other plans that have been drawn up in the past would remain only on paper and would never be implemented. I would, therefore, end with the appeal that the Government should not rest content only with the passing of this Bill but should offer their co-operation. The people's co-operation will come, because all of us want clean and beautiful cities to live in. But it is for the Government as the ultimate authority to see that many of the provisions—salutary provisions—of this Bill are carried out and in this hope, Sir, I end my remarks by saying that we should receive the fullest co-operation from the Government agencies also.

Thank you Sir.

*திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, தற்போது அமுலில் உள்ள டவுன் பிளானிங் சட்டம் மிகப் பழமையானது. முதன் முதலில் ஸ்தல ஸ்தாபனச் சட்டம் நிறைவேற்றப்பட்ட அதே வருஷத்தில், 1920-ம் வருஷத்தில், நிறைவேற்றப்பட்ட சட்டம் இது.

சுதந்திரம் கிடைத்த பின், 1947-ம் வருஷத்தில் முதன் முதலாக அந்தச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்காக, அன்று இருந்த அரசாங்கம் ஏதேனும் வழி செய்ய வேண்டுமென்று ஒரு குழுவை நியமித்திருந்தார்கள். அப்படி இருந்தும் உருப்படியாக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. பல குறைபாடுகள் அந்தச் சட்டத்தில் இருக்கின்றன என்று இப்போது ஒரு புதிய சட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். புதிதாக ஒரு சட்டம் தயாரித்தாலும், அதுவும் இதுபோன்று சுமார் 130 கிளாஸ்கள் உள்ள ஒரு சட்டத்தைக் கொண்டுவரும்போது, குறைகள் இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இதைக் கண்டிப்பாகப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று எண்ணி வற்புறுத்தியிருந்தோம். நாங்கள் நினைத்தது போல, அரசாங்கம் பொறுக்குக் குழுவிற்கு அனுப்புவதற்கு முன் வந்தது உண்மையில் மிகவும் நல்ல விஷயம். ஏனெனில் நமது நாட்டுப்புற கிராமங்களுக்கு இம்மாதிரி ஒரு டவுன் பிளானிங் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது என்பது இதுதான் முதல்தடவை. நகரங்களில் ஏற்கெனவே இந்தச் சட்டம் இருக்கிறது. நகரங்களில் இருப்பவர்கள் ஓரளவு இந்தச் சட்டத்திற்கிணங்க செயல்பட இயலும். ஆனால் கிராமங்களில் இதை அமுலுக்குக் கொண்டுவரும் போது, அரசாங்கமும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அதை அமுல்

27th November 1970] [திரு. சே. ராஜாராம்]

படுத்துவது என்பது லேசில் நடக்கக்கூடிய காரியமல்ல. மிகவும் கஷ்டம் ஏற்படும். ஆகையினுல் இதை நன்ருகப் பரிசீலிக்க வேண்டும். இதிலே டெவலெப்மெண்ட் பீஸ் அல்லது டெவலெப்மெண்ட் சார்ஜஸ் கூட வசூலிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இம்மாதிரி விஷயங்களையெல்லாம் நன்கு விவரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். இதில் கட்சிக் கண்ணேட்டம் என்று ஒன்றுமே கிடையாது. நாட்டு மக்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராம மக்களுக்கு, நியாயம் கிடைத்து இந்தச் சட்டத்தினுல் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு என்னென்ன திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமோ அவைகளைச் செய்வதற்கு ஒத்துழைப்புக் கொடுத்து, நாம் எல்லோரும் மிகவும் தெளிவாகவும், உஷாராகவும் இருந்து இந்தப் புதிய சட்டத்தைக் கிராமப்புறங்களில் அமுலுக்குக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு பொது விஷயத்தைச் சொல்லத்தான் நான் விரும்பினேனேயொழிய, சட்டத்திலுள்ள கிளாஸ்களைப் பற்றியோ, ஷரத்துக்களைப் பற்றியோ நான் விவரமாகப் பேச விரும்பவில்லை. ஏனென்ருல் பொறுக்குக் குழுவில் நான் ஒரு அங்கத்தினன். பொறுக்குக் குழுவில் அதைப்பற்றி விவாதித்துக் கொள்ளலாம் என்று எண்ணி, இப்போது அதுபற்றி விவரமாகப் பேச விரும்பவில்லை என்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, டவுன் பிளானிங் பற்றி இந்தச் சட்டம் வருகின்றது. அதை நான் வரவேற்றுப் பேசுவதோடு, அதிலே சில குறைபாடுகளை நிவர்த்திக்க வேண்டும் என்பதற்காக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்னுலேயே நான் காஞ்சீபுரத்தில் முனிசிபல் கவுன்சிலராக இருந்த காரணத்தினுல், என்னுடைய 22 வருஷ அனுபவத்தில், முனிசிபாலிடியில் குறைகள் ஏராளமாக இருப்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட குறைகளைத் திருத்த இது போன்ற புதுச் சட்டங்கள் போடுவது நம்முடைய ஆட்சிக்குப் பெருமை. அது மட்டுமல்ல. இதற்கு முன்னுலே கட்டிடம் கட்ட வேண்டுமென்ருல், அதுவும் முனிசிபாலிடியாக இருக்கிற ஊரில் ஒரு வீடு கட்ட வேண்டுமென்ருல், முனிசிபல் சட்டப் பிரகாரம், அந்த வீட்டுக் கட்டிடத்திற்கு ஒருபிளான் போட்டு முனிசிபாலிட்டிக்குக் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு 30 நாட்களுக்குக்குள் லைசென்ஸ் வரவில்லையென்ருல், கட்டிடம் கட்டிக் கொண்டே போகலாம். முப்பது நாட்களுக்குள் லைசென்ஸ் வர வேண்டும். அதற்குள் லைசென்ஸ் வரவில்லையென்ருல், கட்டிடத்தை இஷ்டம்போல, பிளானில் இருக்கிற மாதிரியோ, வேறு மாதிரியோ, சேர்த்தோ குறைத்தோ கட்டிக்கொள்வதற்கு வழி இருந்தது. ஆறு மாதத்திற்குப் பிறகு அதிகாரிகள் வந்து மக்களுக்கு மிகவும் தொல்லை கொடுப்பார்கள். ''இது ஏன் இப்படிக் கட்டப்பட்டிருக்கிறது? இந்தப் பக்சம் ஏன் ஜாஸ்தியாக இருக்கிறது, நீ கொடுத்த பிளானில் இப்படி கொடுத்திருக்கிருயே?'' என்று அவர்கள் கேட்டால், நான் ஏற்கெனவே கட்டி முடித்துவிட்டேன் என்று சோர்ட்டும் கையுமாக அலைகிற மக்கள் ஏராளமாக இருக்கிருர்கள். அது நிச்சயமாக இதுவரை டவுன் பிளானிங்கில் தீர்ந்திருக்கிறதா என்ருல் இல்லை. அந்தச் சட்டத்தில் ஏராளமான பொத்தல்கள் இருந்தன. முன்பக்கம் இவ்வளவு இருக்க வேண்டும், பின்பக்கம் இவ்வளவு இருக்க வேண்டுமென்று சட்டத்தில் இருந்தாலும், சட்டத்தில் ஓட்டை இருக்கிற காரணத்தினுல், நடை

5-00 p.m.

முறையில் சரியாக நடைபெறவில்லை. காஞ்சீபுரத்தை எடுத்துக்கொண்டால், அங்கே டவுன் பிளானிங்கில் ஏராளமான பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. எனக்கு முன் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் மிகவும் அழகாகச் சொன்னார்கள். எங்கு வேண்டுமானாலும் என்க்ரோச்மெண்ட் செய்கிறார்கள். இதற்குப் பெயரா டவுன் பிளானிங்? இதற்கு ஒரு சட்டமா? ஒரு சட்டத்தை நாம் கொண்டுவரும்போது, அது நடைமுறைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். ஏற்கெனவே கொண்டுவந்த சட்டம் அப்படி நடைமுறைக்கு ஒத்ததாக இல்லை. புதியதாக ஒரு ஊரில் ஒரு டவுன் பிளானிங் கொண்டுவர வேண்டுமென்றால், இந்தப் பக்கம் வழி இருக்க வேண்டும், இந்தப் பக்கம் இவ்வளவு இடைவெளி இருக்க வேண்டுமென்ற ஒரு ஒழுங்குமுறை வேண்டும். அப்படி ஒழுங்குமுறையற்று இன்னும் டவுன் பிளானிங் இருக்கிற காரணத்தால், அந்த ஒழுங்கு முறையையும் இந்தச் சட்டத்தில் சேர்க்க வேண்டும். ஒரு வீடு கட்டுவதற்கு லைசென்ஸ் 30 நாட்களுக்குள் தரப்பட வேண்டும். முப்பது நாட்களுக்குள் லைசென்ஸ் வரவில்லையென்றால், கட்டிடத்தைக் கட்டி விடுகிறார்களே. அப்படிக் கட்டக்கூடாத தன்மை சட்டத்தில் இருக்க வேண்டும். ஒரு இடத்தில் நான்கு அடி உள்ளே விட்டுக் கட்ட வேண்டுமென்று முனிசிபாலிடியிலே இருக்கிறது. ஆனால் அதற்கு அடுத்தாற்போல கட்டப்படுகிற வீட்டிற்கு நான்கு அடி உள்ளே தள்ள வேண்டியதில்லை. ரெகுலர் லைனில் கட்டுகிறார்கள். ரெகுலர் லைனை எப்படி வேண்டுமானாலும் இழுத்துக்கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. செல்வாக்குள்ளவர்களுக்கு ஏற்ற மாதிரியாக, ஆளுக்கு ஒரு மாதிரியாக ரெகுலர் லைனை இழுக்கிறார்கள். முனிசிபாலிடி அங்கே இருக்கிறதா, இல்லையா? இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருக்கின்றன. வீடு கட்டுவதற்கு 30 நாட்களுக்குள்ளே லைசென்ஸ் கொடுக்கப்பட வேண்டும். அதற்கென்று தனியாக ஒரு டிபார்ட்மெண்ட் இப்போது இருக்கிறது. இருந்தாலும் செயல் முறையிலே வேலை செய்யவில்லை. அது சரியாக வேலை செய்வதற்குத் தக்க திருத்தங்களை இதிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். மாதவன்</u>: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நகர கிராமப்புறங்களிலே ஒருங்கிணைந்த திட்டங்களை உருவாக்குவதற்காக இந்த மசோதா இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவை எல்லாக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் பரிசீலித்து ஆராய்ந்து, மக்களுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டு மிக விரைவிலே சட்டமாக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு அரசாங்கம் கூட்டுக் குழு அமைப்பது என்ற முடிவை எடுத்திருக்கிறது. இதை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஆதரித்ததற்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன். நகரங்களும் கிராமங்களும் வளர வேண்டுமென்ற நல்லெண்ணம் தொடர்ந்து நமக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற முயற்சி கூட 1947-ம் ஆண்டு பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் 1967-ம் ஆண்டு நம்முடைய மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இது போன்ற விதி முறைகளெல்லாம் கொண்டுவர வேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிறது. ஆனால் நீண்ட காலமாக இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. இப்போது நம்முடைய அரசாங்கம் இந்தச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற நல்ல முயற்சி எடுத்திருக்கிறது.

27th November 1970] [திரு. எஸ்- மாதவன்]

இந்தச் சட்டத்திலே உள்ள பிரிவுகளைப் பற்றிய கருத்துக்களை எல்லாம் மாண்புமிக்க உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். நண்பர் திரு. ராஜாராம் அவர்கள் 'திருத்தம்' வேண்டுமென்று இப்பொழுதே சொல்லிவிட்டார்கள். திருத்தம் வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பரிசீலிக்கத் தான் குழு அமைத்திருக்கிறோம். ஆனால், அதற்கு முன்பே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜாராம் அவர்கள் திருத்தம் வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். எனவே, அவருடைய கருத்தையும் இந்தக் குழுவிலே உள்ள உறுப்பினர்கள் பரிசீலிப்பார்கள் என்று உறுதி கூறுகிறேன். நம் விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் இந்த மசோதாவிலே உள்ள பிரிவுகளை மாற்றியமைத்துக் கொள்ளலாம். ஆனால், நகரங்களும், கிராமப்புறங்களும் சரியான முறையிலே ஆக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் வெளி நாடுகளிலே உள்ள நல்ல முன்னேற்றங்களை யெல்லாம் எடுத்துச் சொன்னார்கள் இந்த அவையிலே. நமக்கும் அந்த ஆசை வரத்தான் செய்கிறது. ஆனாலும் அப்படிக் காரியங்களை ஆற்றுவது இங்கே கஷ்டமாகிவிடுகிறது. காரணம், அதற்கு இடையூறாக பொருளாதாரக் காரணங்கள் முதன்மையாக அமைகின்றன இங்கே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இப்பொழுதே நாம் சட்டப்படி அனுமதி வாங்கிக்கொண்டு கட்டிடங்களைக் கட்ட வேண்டுமானால், அவைகளுக்கு எத்தகைய எதிர்ப்பு மக்களிடத்திலே எழுகிறது என்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக சென்னை நகரத்திலேயே இதைப் பார்க்கலாம். எங்கேயாவது சட்டத்திற்கு விரோதமாக ஆக்கிரமிப்பு நடந்தால், அந்த இடத்திலே எல்லா அரசியல் கட்சிக் கொடிகளும் பறக்கவிடப்படுகின்றன. எனவே, அவர்களை ஆக்கிரமிப்பு செய்த இடத்திலேயிருந்து வெளியேற்றுவதற்கு பல எதிர்ப்புகள் வருகின்றன என்பதை நாம் பார்க்கலாம். இது எல்லாம் தவறு என்று சொல்லிவிட முடியாது. வறுமையும், ஏழ்மையும் நம் நாட்டிலே அதிகமாக இருக்கும் பொழுது, இது போன்ற நல்ல முயற்சிகள் தடைபடத்தான் செய்கின்றன. ஆனால், வளர்ந்து வருகின்ற இடங்களைச் சரியான முறையிலே வளர்ப்பதற்கு இது நமக்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது. இப்போழுது நம்முடைய வீட்டு வசதி வாரியம் கட்டிடங்களைக் கட்டும்பொழுது, இப்படிப்பட்ட முறைகளை அவர்கள் கையாண்டு வீட்டு வசதியைப் பெருக்கும் வகையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். அதைப் போலவே, கூட்டுறவுச் சங்கங்கள் வீடுகளைக் கட்டும்பொழுது இந்த முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். இருந்தாலும், இந்த முறைகள் பெரும்பாலும் எல்லா இடங்களிலேயும் பின்பற்றப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே எந்த அளவுக்கு மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் இதை நாம் வெற்றிகரமாகச் செய்ய முடியும். எனவே மக்களின் ஒத்துழைப்பும் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பும் இதற்குக் கிடைக்குமா என்ற சந்தேகமும் இங்கே கிளப்பப்பட்டது. நான் சொல்லிக்கொள்கிறேன், நிச்சயமாக அரசுத் துறையிலே பணிபுரியும் பல்வேறு வகையான உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பு இந்தத் திட்டம் நல்ல முறையிலே செயலாக்கப்படுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிறைய

இருக்கிறது. அதனால் தான் இந்த மசோதாவை எதிர் கட்சித் தலைவர் சொன்னதுபோல், அதிச விவரமாக இப்பொழுது நாம் அலசிப் பார்க்கா விட்டாலும், நிச்சயமாக ஒட்டு மொத்தமாகப் பொறுக்குக் குழுவிலே இதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து, எந்தெந்தக் கருத்துக்கள் சொன்னாலும், அவைகளை இந்தச் சட்டத்தின் நடவடிக்கையால் நிறைவேற்றும் வகையில் அந்தக் கருத்துக்கள் எல்லாம் செயல்படும் என்ற உறுதியை இங்கே தந்து, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இம் மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : Tne question is—

" That this House corcurs with the Assembly in setting up a Joint Select Committee of botn the Houses consisting of 30 Members (20 Members of the Assembly and 10 Members of the Council) to consider the Tamil Nadu Town and Country Planning Bill, 1970 (L.A. Bill No. 23 of 1970) and that the following Members of this House be selected to serve on sucn a Joint Select Committee:—

1. Thiru A. R. Damodaran
2. Thiru S. Jayarama Reddiar
3. Thirumathi S. Manjubhashini
4. Thiru S. Mutnu
5. Thiru G. Parangusam
6. Thiru K. Rajaram
7. Thiru N. Sundaresan
8. Thiru G. Swaminatnan
9. Thiru V. Thangapandiar
10. Thiru V. Venga.

The motion was put and carried.

(2) *The Tamil Nadu Panchayat Courts (Validation of Proceedings) Bill*, 1970
(*L.A. Bill No.* 31 *of* 1970)

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, I move :

" That the Tamil Nadu Panchayat Courts (Validation of Proceedings) Bill,† 1970 (L.A. Bill No. 31 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

As the hon. Members are aware, on 10th August, 1965 Thiru R. Venkataraman, the then Minister for Industries, while speaking on the Madras Panchayats Amendment Bill, 1965, informed this House as follows :

" The particulars regarding the number and names of Panchayat Boards which functioned as Courts even after the formation of Panchayat Union Councils and the nature of decrees passed by them are still

†Printed as Appendix II